செய்தி வெளியீடு எண்: 354 நாள்: 04.06.2018

## செய்தி வெளியீடு

பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாளினை முன்னிட்டு தமிழக சிறைகளில் இருந்து வரும் சிறைவாசிகளை முன்விடுதலை செய்ய அரசு பரிசீலனை செய்தது. இதன் தொடர்பாக இந்திய அரசியலமைப்பு சட்டம் பிரிவு 161–ன்படி, மாநில ஆளுநருக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தியும், உச்ச நீதிமன்றம் மற்றும் மாநில உயர்நீதிமன்றங்களின் வழிகாட்டுதலின்படியும் அரசாணை(நிலை) எண்.64, உள்(சிறை–4)துறை, நாள்.01.02.2018 மற்றும் அரசாணை(நிலை) எண்.302, உள்(சிறை–4)துறை, நாள்.03.05.2018–ல், நெறிமுறைகள் குறித்த ஆணைகள் வெளியிடப்பட்டன.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் நடைபெறும் அம்மாவின் அரசு, 25.02.2018 அன்று 10 ஆண்டுகள் தண்டனை காலம் நிறைவு செய்துள்ள ஆயுள் தண்டனை சிறைவாசிகளில், முதற்கட்டமாக 67 ஆயுள் தண்டனை சிறைவாசிகள் முன்விடுதலை செய்யப்படுகிறார்கள் .

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**